**O.S.No. 120/2018**

**PW1 : சந்திரசேகரன்** தேதி 28.08.2025

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

ராஜம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் நான் பிராதில் சொன்ன சங்கதிகளை மறுத்து எதிர் வாதம் தாக்கல் செய்துள்ளதை தெரிந்து கொண்டீரா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. எதிர் வாதத்தில் நான் சொன்னது போல் சுவீகாரம் எதுவும் எடுக்கவில்லை என்றும் என் மனைவி சொன்ன தேதியில் சுவீகாரம் எதுவும் நடைபெறவில்லை என்று எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளார்கள் என்றால் அது தவறு. ஓ.கே நாச்சிமுத்துக்கு எப்போது திருமணம் ஆனது என்ற விவரம் எனக்கு தெரியாது. திருமணத்திற்கு பின்னிட்டு சென்னிமலையில் இருந்து ஈரோட்டிற்கு குடியேறிய விவரம் தெரியும். 1950 வாக்கில் குடிவந்து விட்டார். 1950 லிருந்து ஈரோட்டில் தான் குடியிருந்தார். 1950 ல் இருந்து அவர் ஈரோட்டில் குடியிருந்த நிலையில் சென்னிமலையில் அவருடைய வீட்டில் என் மனைவியை சுவீகாரம் எடுத்தாக எவ்வாறு சொல்கிறேன் என்றால் என் மனைவியின் பெற்றோர்கள் சென்னிமலையில் குடியிருந்ததால் சுவீகாரம் அங்கு எடுத்தார்கள். நாச்சிமுத்துக்கு சென்னிமலையில் உள்ள பூர்வீக வீட்டில் வைத்து சென்னிமலையில் சுவீகாரம் எடுத்ததாக என்னுடைய பிராதில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. நான் சொன்ன தேதியில் சொன்னவாறு சுவீகாரம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் என்னுடைய சாட்சியத்திலும் பிராதிலும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. சுவீகாரத்திற்கு பின்னிட்டு என் மனைவி ஈரோட்டில் உள்ள முத்துரங்க முதலியார் வீதியில் ஓ.கே நாச்சிமுத்து குடும்பத்தாருடன் குடியிருந்ததாக ஏதேனும் சாட்சிகளோ

சான்றாவணங்களோ உள்ளதா என்றால் இல்லை. கலைமகள் பள்ளியில் என் மனைவி படித்ததில் சேர்க்கை விண்ணப்பத்திலோ, பள்ளி மாற்று சான்றிதழிலோ அவருடைய முகவரி நாச்சிமுத்து முதலியாரின் முகவரி உள்ளதாகவோ தத்து பிள்ளை என்ற விவரம் உள்ளதாகவோ ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. ஆதார பூர்வமான ஆவணம் எதுவும் இல்லை சாட்சியங்களை கொண்டு நிரூபிக்க தயாராக இருக்கிறோம். பின்னிட்டு சாட்சிகளை தயார் செய்து கொள்ளும் எண்ணத்தில் தான் சாட்சிகளின் பெயர்களை பிராதில் குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாவித்திரியை திருமணம் செய்த நாச்சிமுத்து முதலியாரின் வியாபாரத்தை தொடர்ந்து நடத்தி வருவதாக ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய பூர்வீகம் மார்க்கம்பட்டி, தாராபுரம் என்றால் என் தாத்தா ஊர். என் அப்பாவுடைய ஊர் கரூர். என் தாத்தாவின் குடும்பம் கரூருக்கு குடிபெயர்ந்ததா என்றால் சரிதான். என் அப்பா பெயர் நெய்காரர் என்ற ராமசாமி முதலியார். என் அப்பாவிற்கு 2 மனைவிகள். முதல் மனைவிக்கு 1 மகள், 2 மகன்கள் என்றால் சரிதான். 2 ம் மனைவிக்கு 5 மகன்கள், 4 மகள்கள் என்றால் சரிதான். நெய் கடை தவிர ஆயில் வியாபாரம் செய்து வந்தோம் என்றால் சரிதான். வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு தொழில் நலிவடைந்ததால் நாங்கள் கரூரில் இருந்து ஈரோடு குடிபெயர்ந்தோம் என்றால் சரியல்ல. கரூரில் இருந்து ஈரோடு குடிபெயர்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. கருரிலேயே என் அப்பா குடும்பம் இருந்தது. நான் சொல்லும் விவரம் அனைத்தும் தவறு என்றும் என்னுடைய சகோதரரும் நானும் கரூரில் தொழில் நலிவடைந்ததால் ஈரோட்டிற்கு குடிபெயர்ந்ததோம் என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரியின் குடும்பத்துடன் சேர்ந்து ஈரோட்டில் துர்கா டெக்ஸ்டைல் என்ற நிறுவனத்தை கனி மார்க்கெட் அருகில் நடத்தி வந்தோமா என்றால் இல்லை. என் மாமனார் நடத்தி வந்த ஜவுளி வியாபாரத்தில் இருந்து பிரிந்து வந்து துர்கா என்ற ஜவுளி வியாபாரத்தை

நான் நடத்தினேன். ஓ.கே.நாச்சிமுத்து முதலியார் நான் வியாபாரம் செய்தததற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. என்னுடைய பிராதில் நாச்சிமுத்து முதலியார் எந்த காலகட்டத்தில் இருந்து வியாபாரம் செய்து வந்தேன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. துர்கா டெக்ஸ்டைல் நிறுவனத்தில் இருந்து விலகி ஜெயதுர்கா என்ற நிறுவனத்தை ஆரம்பித்தோம் என்றால் சரிதான். அந்த நிறுவனமும் கடன் சுமை காரணமாக நிறுத்தப்பட்டது என்றால் சரியல்ல. ஏன் அந்த நிறுவனம் நிறுத்தப்பட்டது என்றால் என் மகன்கள் அதில் வேலை பார்த்து வந்ததால் அதை நிறுத்தி விட்டேன். என் மகன்கள் வேறு விலாசத்தில் நடத்தி வருகிறார்கள். இந்த வழக்கில் என் மனைவி காட்டியுள்ள சொத்துகளை தவிர நாச்சிமுத்து முதலியார் அவர் சகோதரர் மாரியப்ப முதலியாருக்கு வேறு சொத்துகள் சென்னிமலையில் இருந்ததா என்றால் உள்ளது. மேற்படி சொத்துக்கள் என் திருமணத்திற்கு முன்பே பிரிவினை ஆனது. 1992 ல் தான் நாச்சிமுத்து முதலியார் , மாரியப்ப முதலியார் இறந்த பிறகு பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. தனலட்சுமி, பழனியம்மாள், ராமலட்சுமி ,காமாட்சி அவர்கள் நாச்சிமுத்து முதலியாரின் சகோதரிகள். சரஸ்வதி ,வசந்தகோகிலம், சாவித்திரி, மல்லிகா, அருணா, சண்முகவேலாயுதம், சாந்தி, விஜயகுமாரி, ராஜம்மாள் ஆகியோர். சரஸ்வதி என் மனைவியின் தாயார். மற்றவர்கள் என் மனைவியின் சகோதரிகள். ராஜம்மாள் எனது மாமியார். என்னிடம் காண்பிக்கப்படும் அ.வ.எண். 133/1992 வழக்கில் நாச்சிமுத்து முதலியார், தனலட்சுமி வகையறா மீது தாக்கல் செய்த வழக்கில் என் மனைவியும் தரப்பினராக உள்ளார் என்றால் சரிதான். அந்த தீர்ப்பாணை என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது பாகப்பிரிவினைக்காக போடப்பட்ட வழக்கு. அதில் என் மனைவி நாச்சிமுத்து முதலியாரின் தத்து மகள் என்று சொல்லப்பட்டுள்ளதா

என்றால் இல்லை. என்னுடைய பெயர் தான் கணவர் பெயராக காட்டப்பட்டுள்ளது. 13.8.1991 ம் தேதியில் மாரியப்பன் இறந்துவிட்டாரா என்றால் ஆமாம். மாரியப்பனின் வாரிசு சான்றிதழில் என் மனைவி பெயர் கண்டுள்ளதா என்றால் ஆம் கண்டுள்ளது. வாரிசு சான்றிதழ் பிவாசாஆ 1. மேற்படி பிவாசாஆ 1 ல் எனது மனைவியின் தந்தை பெயர் மாரியப்பன் என்று உள்ளது என்றால் சரிதான். 5.8.1991 ல் மாரியப்பன் இறந்து விட்டார். நான் சொன்னது போல் என் மனைவியை நாச்சிமுத்து முதலியார் மகள் என்று பிவாசாஆ 1 கொடுக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. நாச்சிமுத்து முதலியார் சுவீகாரம் எடுத்ததற்கு ஆவணம் இல்லை என்பதால் என் மனைவியின் தகப்பனாரின் வாரிசு சான்றிதழில் பெயர் கண்டுள்ளது. ஈரோட்டில் உள்ள சொத்தை பொறுத்து ராஜம்மாளிடம் இருந்து நான் ஒரு பொது அதிகார பத்திரம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ராஜம்மாள் என் மாமியார் என்றோ தத்துபிள்ளை சாவித்திரியின் கணவர் என்றோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை.